# 11 - ஆம் வகுப்பு

# வணிகவியல்

தமிழ்வழி சிறப்புக் கையேடு 2024-25

## கிருஷ்ணகிரி மாவட்டம்

<u>**தலைமை**</u>

**திருமதி. க.பெ. மகேஸ்வரி அவர்கள்**
இணை இயக்குநர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை.

**திரு. முனிராஜ் அவர்கள்**
முதன்மைக் கல்வி அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

## <u>ஒருங்கிணைப்பாளர்கள்</u>

திரு. நா. ராஜன், மாவட்ட கல்வி அலுவலர், கிருஷ்ணகிரி.
திருமதி. ஆர்.வி.இரமாவதி, மாவட்ட கல்வி அலுவலர், ஓசூர்.
முனைவர்.மு.வெங்கடேசன் முதன்மைக் கல்வி அலுவலர் நேர்முக உதவியாளர் (மே.நி.க) கிருஷ்ணகிரி மாவட்டம்.
திரு.எஸ்.வடிவேல்,உதவி திட்ட அலுவலர்(முகஅ)கிருஷ்ணகிரி மாவட்டம்.
முனைவர். பொ.ஜெ.முரளி, தலைமை ஆசிரியர், அ.மே.நி.பள்ளி, பாரூர்.
திரு.ஜான்பாக்கியம், உதவி தலைமை ஆசிரியர் ந.நி.பள்ளி இராசு வீதி, கிருஷ்ணகிரி.

## <u>பாட ஆசிரியர்கள் குழு</u>

திரு. செ.பழனி, அரசு மேல்நிலைப்பள்ளி, கண்ணன்டஹள்ளி.
திரு. இரா. செந்தில்நாதன், அரசு மேல்நிலைப்பள்ளி, போச்சம்பள்ளி.
திருமதி. ப.சக்திவேணி, அரசு மேல்நிலைப்பள்ளி, நெடுங்கல்.
திரு. இல.பன்னீர்செல்வம், அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, சந்தூர்.

# 11-ஆம் வகுப்பு
# வணிகவியல்

## அத்தியாயம் 1 இந்தியத் துணைக் கண்டத்தின் வாணிக வரலாற்று பின்னணி

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1. **பொருட்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு ------------ என்று பெயர்.**
   **அ) அங்காடி** ஆ) சந்தை இ) நாளங்காடி ஈ) அல்லங்காடி
2. **இடத் தடை இதன் மூலம் நீக்கப்படுகிறது.**
   **அ) போக்குவரத்து** ஆ) பண்டகசாலை இ) விற்பனையாளர் ஈ) காப்பீடு
3. **அர்த்தசாத்திரம் என்ற புத்தகம் யாரால் எழுதப்பட்டது?**
   **அ) சாணக்கியர்** ஆ) வால்மிகி இ) திருவள்ளுவர் ஈ) இளங்கோவடிகள்
4. **வியாபாரம் மற்றும் வணிகம் ---------- பேரரசில் பொதுவானவையாக இருந்தது.**
   அ) பல்லவர் ஆ) சோழர் **இ) பாண்டியர்** ஈ) சேரர்
5. **----------- முதன் முதலில் சுல்தானாக இருந்தார். அடர்ந்த வனப்பகுதிகளில் பாதை உருவாக்கி வியாபாரம் செய்ய வழிவகுத்தார்.**
   **அ) பால்பன்** ஆ) வாஸ்கோடகாமா இ) அக்பர் ஈ) அலாவுதீன் கில்ஜி

## அத்தியாயம் 2 தொழிலின் நோக்கங்கள்

6. **தொழிலின் முதன்மைக் குறிக்கோள் -----------**
   **அ) இலாபம் ஈட்டுதல்** ஆ) இலாபம் ஈட்டாமல் இருத்தல்
   இ) சிறப்புத் தேர்ச்சி ஈ) மேற்கூறிய எதுவுமில்லை
7. **மருத்துவர் தொழில் என்பது ---------**
   அ) வேலைவாய்ப்பு ஆ) தொழில் **இ) சிறப்பு தொழில்** ஈ) தனியார் வணிகம்
8. **பின்வருவனவற்றுள் எது வியாபார நடவடிக்கையின் சிறப்பியல்புகள் இல்லை?**
   அ) பொருட்கள் மற்றும் சேவை உருவாக்குதல் ஆ ) இடர் ஏற்றல்
   இ) பொருட்கள் மற்றும் சேவை பரிமாற்றம் (அ) விற்பனை **ஈ) சம்பளம் / கூலி**
9. **அன்பு மற்றும் பாசம் அல்லது சமூக சேவை உள்நோக்கம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்**
   அ) பொருளாதாரச் செயல்பாடுகள் ஆ ) பண நடவடிக்கைகள்
   **இ) பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்** ஈ) நிதி நடவடிக்கைகள்.

## அத்தியாயம் 3 தொழில் நடவடிக்கைகளின் வகைகள்

10. **இரும்பிலிருந்து தாதுக்களைப் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை என்பது**
    அ) கட்டுமானத் தொழில்கள் ஆ) தயாரிப்புத் தொழில்கள்
    **இ) பிரித்தெடுக்கும் உற்பத்தித் தொழில்கள்** ஈ) மரபுசார் உற்பத்தித் தொழில்கள்
11. **ஒரு முழுப் பொருள் தயாரிக்கப் பல நிலைகளைக் கடக்கும் உற்பத்தி முறை என்பது**
    அ) பகுப்பாய்வு உற்பத்தித் தொழில் ஆ) செயற்கைப் பொருள் உற்பத்தித் தொழில்
    **இ) தொடர்முறை உற்பத்தித் தொழில்** ஈ) ஒன்று திரட்டும் உற்பத்தித் தொழில்

**12. அதிக அளவு அபாயத்தைக் கொண்டது.**
**அ) உற்பத்தித் தொழில்** ஆ) வணிகம் இ) வியாபாரம் ஈ) இவை அனைத்தும்.

**அத்தியாயம் 4 தனியாள் வணிகம்**

**13. கீழ்க்கண்டவற்றில் எது பழமையான வியாபார அமைப்பு வடிவம்?**
**அ) தனியாள் வணிகம்** ஆ) கூட்டாண்மை இ) கூட்டுறவு சங்கம் ஈ) நிறுமம்

**14. எந்த அமைப்பு ஒரே ஒருவராக உரிமையாளர், நிறுவனர் மற்றும் மேலாளர் என்ற வகையில் இருக்கும்?**
அ) கூட்டு நிறுவனம் ஆ) அரசு நிறுவனம்
இ) கூட்டுறவு சங்கம் **ஈ) தனியாள் வணிகம்**

**15. தனியாள் வணிகத்தின் பொறுப்பு**
அ) வரையறு பொறுப்பு **ஆ) வரையறாப் பொறுப்பு**
இ) அமைப்பெளிமை ஈ) விரைவான முடிவு

**16. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று கூட்டுரு சாரா நிறுவனம்?**
அ) கூட்டுப் பங்கு நிறுமம் **ஆ) தனியாள் வணிகம்**
இ) அரசு நிறுமம் ஈ) கூட்டுறவு

**அத்தியாயம் 5 இந்து கூட்டுக் குடும்பம் மற்றும் கூட்டாண்மை**

**17. இந்து கூட்டுக் குடும்பம் யாரால் நிர்வகிக்கப்படுகிறது?**
அ) முதலாளி **ஆ) கர்த்தா** இ) மேலாளர் ஈ) கூட்டாளி

**18. இந்து கூட்டு குடும்ப வியாபாரத்தில் ஒருவர் எவ்வாறு உறுப்பினராகிறார்?**
அ) உடன்படிக்கையால் **ஆ) பிறப்பால்**
இ) முதலீட்டின் அடிப்படையில் ஈ) நிர்வாகத்தின் அடிப்படையில்

**19. இந்து கூட்டு குடும்பத் தொழிலில் உறுப்பினர்களை எவ்வாறு அழைப்பாய்?**
அ) கர்த்தா **ஆ) கூட்டு வாரிசுதாரர்** இ) தலைமுறை ஈ) கூட்டாளிகள்

**20. ----------- சட்டத்தின்படி ஆண் வாரிசுகள் மட்டுமே வம்சாவளி சொத்தில் உரிமையுள்ளவர்கள்.**
அ) இந்துச் சட்டம் **ஆ) மிடாக்சரா சட்டம்**
இ) தயாபாகா சட்டம் ஈ) மேற்கண்ட யாவும்

**21. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது**
**அ) ஒப்பந்தத்தால்** ஆ) கூட்டாளிகளிடையே உறவு
இ) அரசின் வழிகாட்டல் ஈ) நட்பின் அடிப்படையில்

**அத்தியாயம் 6 கூட்டு பங்கு நிறுமம்**

**22. நிறுவனத்திற்கும் வெளி நபருக்கும் உள்ள உறவு முறையைப் பற்றிக் குறிப்பிடுவது எது?**
அ) தகவலறிக்கை ஆ) சங்க நடைமுறை விதிகள்
**இ) அமைப்பு முறையேடு** ஈ) கூட்டுருவாக்கச் சான்றிதழ்

**23. நிறுமச் சட்டத்தின் அட்டவணை - அ (Table - A) என்பது**

அ) நிகழ்ச்சிக் குறிப்பேட்டின் மாதிரி

ஆ) இருப்பு நிலைக் குறிப்பின் மாதிரிப் படிவம்

**இ) நிறுமச் செயல்முறை விதிகளின் மாதிரி**

ஈ) நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி

**24. கீழ்கண்டவற்றுள் எது நாடாளுமன்ற அல்லது மாநிலச் சட்ட மன்றங்கள் இயற்றிய சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது?**

அ) பட்டய (சாசன) நிறுமம் ஆ) அயல்நாட்டு நிறுமம்

இ) அரசு நிறுமம் **ஈ) சட்டமுறை நிறுமம்**

**25. நிறுமத்தின் இயக்குநரை கீழ்க்கண்டவற்றுள் யார் தேர்ந்தெடுக்கிறார்கள்?**

அ) கடனீந்தோர் ஆ) கடனாளர் இ) கடனீட்டுப் பத்திரதாரர் **ஈ) பங்குதாரர்கள்**

**26. ஒரு நாட்டின் அரசராலோ, அரசியாலோ வழங்கப்பட்ட சாசனத்தின் விளைவாக உருவாக்கப்படும் நிறுமங்கள்--------- எனப்படும்.**

**அ) பட்டய (அ) சாசன நிறுமங்கள்** ஆ) சட்டமுறை நிறுமங்கள்

இ) பதிவு செய்யப்பட்ட நிறுமங்கள் ஈ) அயல்நாட்டு நிறுமங்கள்

## அத்தியாயம் 7 கூட்டுறவு அமைப்பு

**27. கூட்டுறவு அமைப்பில் உறுப்பினர்கள்**

அ) யார் வேண்டுமானாலும் உறுப்பினர் ஆக முடியாது

ஆ) தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்

**இ) யார் வேண்டுமானாலும் இருக்கலாம்**

ஈ) மேற்கண்டவற்றில் எதுவுமில்லை

**28. கூட்டுறவு தோல்வியடைவதற்கான காரணம்**

அ) வரம்பற்ற உறுப்பினர் ஆ) ரொக்க வியாபாரம்

**இ) தவறான நிர்வாகம்** ஈ) இழப்பு ஏற்படுவதால்

**29. அனைத்து கூட்டுறவுகளும் நிறுவப்படுவதற்கு**

அ) தொண்டு நிறுவன நோக்கம் **ஆ) சேவை நோக்கம்**

இ) இலாப நோக்கம் ஈ) சீர்திருத்த நோக்கம்

**30. நுகர்வோர் கூட்டுறவு ------------ நாட்டில் முதன் முதலாக வெற்றி பெற்றது.**

**அ) இங்கிலாந்து** ஆ) அமெரிக்கா இ) சுவிஸ் ஈ) இந்தியா

**31. ராக்டேல் சொசையிட்டி தோற்றுவித்தவர்--------**

**அ) ராபர்ட் ஓவென்** ஆ) H.C. கால்வெர்ட் இ) டால்மாக்கி ஈ) லம்பேர்ட்

## அத்தியாயம் 8 பன்னாட்டு நிறுமங்கள்

**32. பன்னாட்டு நிறுமம் என்பது**

அ) எந்த ஒரு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது

ஆ) உலகின் முதல் 200 நிறுவனங்களின் ஒன்றாகும்

**இ) ஒன்றுக்கும் மேற்பட்ட நாட்டில் நிறுவனங்களை கொண்டுள்ளது**

ஈ) இவை அனைத்தும்.

**33. பன்னாட்டு நிறுமங்கள் பின்வருவனவற்றில் யாரால் கட்டுப்படுத்தப்படுகின்றன.**

அ) கிளைகள் ஆ) அதன் துணை நிறுவனங்கள்

**இ) தலைமையகம்** ஈ) நாடாளுமன்றம்

**34. பல நாடுகளில் இயங்கும் நிறுவனங்கள் ஒரு நாட்டில் இருந்து நிர்வகிக்கப்படுகின்றன. இதனை --------------- நிறுவனங்கள் எனலாம்.**

அ) அரசு நிறுவனங்கள் **ஆ) பன்னாட்டு நிறுவனங்கள்**

இ) தனியார் நிறுவனங்கள் ஈ) இணை நிறுவனங்கள்

**35. தலைமை அலுவலகத்தின் கிளைகள் /துணை நிறுவனங்கள் /துணை நிறுவனங்களுக்கு முடிவெடுக்கும் அதிகாரத்தை வழங்குவது**

அ) மையப்படுத்துதல் **ஆ) பரவலாக்கம்** இ) அதிகாரம் ஈ) ஒருங்கிணைப்பு

**36. கோகோ கோலா நிறுவனத்தை எதற்கு உதாரணமாக கூறலாம்?**

**அ) பன்னாட்டு நிறுமம்** ஆ) அரசு நிறுமம்

இ) இணை நிறுமம் ஈ) பொதுத்துறை நிறுமம்

## அத்தியாயம் 9 அரசு அமைப்புகள்

**37. அரசு நிறுமத்தின் பங்கு முதலீடு--------- க்குக் குறையாமல் அரசு பெற்றிருக்க வேண்டும்.**

அ) 75% ஆ) 60% இ) 95% **ஈ) 51%**

**38. பொதுத்துறை நிறுவனத்தின் மிகப்பழமையான அமைப்பு**

அ) பொதுத்துறை நிறுவனம் **ஆ) துறைவாரி அமைப்பு**

இ) பன்னாட்டு நிறுவனம் ஈ) சட்டமுறை நிறுவனம்

**39. ஒரு அரசாங்க நிறுவனம் எவர் பெயரில் பங்குகளை வாங்குகிறது?**

அ) பிரதமர் **ஆ) குடியரசுத் தலைவர்**

இ) இந்தியத் தலைமை நீதிபதி ஈ) மாநில முதலமைச்சர்

**40. அரசு நிறுவனங்களின் முதன்மையான நோக்கம் என்பது**

அ) இலாபம் ஈட்டுதல் ஆ) வேலைவாய்ப்பை உருவாக்குதல்

**இ) மக்களுக்கு சேவை செய்தல்** ஈ) மேற்கூறிய அனைத்தும்

## அத்தியாயம் 10 இந்திய ரிசர்வ் வங்கி

**41. ரூபாய் நோட்டுகளை வெளியிடுவதற்கு எந்த வங்கிக்கு அதிகாரம் உள்ளது.**

**அ) மைய வங்கி** ஆ) வணிக வங்கி

இ) கூட்டுறவு வங்கிகள் ஈ) வெளிநாட்டு வங்கிகள்

**42. இந்திய மைய வங்கி என்பது**

அ) பி.என்.பி ஆ) எஸ்.பி.ஐ இ) ஐ.சி.ஐ.சி.ஐ **ஈ) ஆர்.பி.ஐ**

**43. இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1, ----------- ஆண்டு முதல் தன் பணிகளைத் தொடங்கியது.**

அ) 1936 **ஆ) 1935** இ) 1934 ஈ) 1933

**44. வங்கியர்கள் பணத்தை கையாள்பவர்கள் மட்டுமல்ல------------ க்கு வழிகாட்டுபவர்களாகவும் இருக்கிறார்கள்.**

**அ) பொருளாதார வளர்ச்சி** ஆ) வர்த்தக வளர்ச்சி

இ) தொழில் வளர்ச்சி ஈ) சேவை வளர்ச்சி

**45. கீழ்கண்டவற்றில் எது மைய வங்கியின் பணி அல்ல?**

அ) ஒரு நாட்டின் வங்கி அமைப்புகளுக்கு வழிகாட்டுதல் மற்றும் வங்கி அமைப்பு முறைகளை ஒழுங்குபடுத்துதல்

**ஆ) பொதுமக்களுடன் தொடர்பு கொள்ளுதல்**

இ) அரசாங்க வங்கியாளராக நடத்தல்

ஈ) மற்ற வங்கிகளின் வைப்பு கணக்குகளைப் பராமரித்தல்

<u>**அத்தியாயம் 11 வங்கிகளின் வகைகள்**</u>

**46. கீழ்க்கண்டவற்றில் எது தொழில் துறை வங்கி அல்ல**

அ) ICICI **ஆ) HSBC** இ) SIDBI ஈ) IDBI

**47. உள்ளூர் பகுதி வங்கிகள் ஊக்குவித்து வருவது**

**அ) கிராம சேமிப்பு** ஆ) வணிகச் சேமிப்பு

இ) தொழில்துறை வளர்ச்சி ஈ) விவசாய வளர்ச்சி

**48. வெளிநாட்டு வங்கிகள் தங்கள் செயல்பாடுகளை இந்தியாவில் ஆரம்பித்த ஆண்டு**

அ) 1978 ஆ) 1979 **இ) 1980** ஈ) 1981

<u>**அத்தியாயம் 12 வணிக வங்கிகளின் பணிகள்**</u>

**49. மின்னணு வங்கியினை ---------- மூலம் செயல்படுத்தலாம்.**

அ) கணினிகள் ஆ) கைபேசிகள்

இ) ATM அட்டை **ஈ) மேலே உள்ள அனைத்தும்**

**50. RTGS மூலம் குறைந்த பட்சம் எவ்வளவு பணம் பரிமாற்றம் செய்ய முடியும்?**

அ) எவ்வளவு தொகை வேண்டுமானாலும் ஆ) ரூ.50,000 **இ) 2 லட்சம்** ஈ) 5 லட்சம்

**51. இந்தியாவின் மிகப்பெரிய வணிக வங்கி**

அ) ஐ.சி.ஐ.சி.ஐ **ஆ) எஸ்.பி.ஐ** இ) பி.என்.பி ஈ) ஆர்.பி.ஐ

**52. எந்த வகையான கணக்கு குறிப்பிட்ட நேரத்தில்,குறிப்பிட்ட சில தொகையைச் செலுத்த வேண்டியது கட்டாயம்?**

அ) சேமிப்பு வைப்பு ஆ) நிலையான வைப்பு

இ) நடப்பு வைப்புத் தொகை **ஈ) தொடர் வைப்பு**

**53. எந்த ஒரு வகையான சேவைகள் வணிக வங்கியால் வழங்கப்படுவதில்லை?**

**அ) வணிக தகவலைச் சேகரித்தல் மற்றும் அளித்தல்**

ஆ) வங்கி மேல்வரைப் பற்று இ) ரொக்கக் கடன்

ஈ) உண்டியல்களைத் தள்ளுபடி செய்தல்

<u>**அத்தியாயம் 13 பண்டக காப்பு**</u>

**54. பண்டகக் காப்பகம்--------தடையை நீக்குகிறது.**

அ) ஆள்சார் **ஆ) காலத் தடை** இ) இடர்பாட்டுத் தடை ஈ) அறிவுத் தடை

**55. பண்டகக் காப்பகம்------------ மையமாக பொருள்களை வைத்திருக்கிறது.**

அ) சந்தையிடுதல் ஆ) வரிசைப்படுத்துதல் **இ) வழங்கல்** ஈ) விற்பனை செய்தல்

**56. ---------- வங்கியில் இருந்து நிதியுதவி பெறுவதற்காக இணைப்பாக வழங்கப்பட்டது.**

அ) துறைமுகச் சான்றாணை ஆ) பண்டகக் காப்பாளர் இரசீது

இ) துறைமுக இரசீது **ஈ) பண்டகச் சான்றாணை**

**57. பிணைய அடிப்படையில் பொருட்களை பாதுகாப்பதற்காக அரசால் உரிமம் வழங்கப்பட்ட காப்பகங்கள்-------ஆகும்.**

**அ) பிணைய பண்டகக் காப்பகங்கள்** ஆ) குளிர் பதன பண்டகக் காப்பகங்கள்

இ) பொதுப் பண்டகக் காப்பகங்கள் ஈ) மேற்கூறிய அனைத்தும்.

**58. பழங்கள், காய்கறிகள் போன்ற அழுகக் கூடிய பொருட்களின் சேமிப்பிற்காக ------ பண்டகக் காப்பகங்கள் பயன்படுத்தப்படுத்தப்படுகின்றன.**

அ) ஆவணம் ஆ) தனியார் **இ) குளிர்பதன** ஈ) கூட்டுறவு

<u>அத்தியாயம் 14 போக்குவரத்து</u>

**59. போக்குவரத்து ---------- தடையை நீக்குகிறது.**

அ) நேரம் **ஆ) இடம்** இ) ஆள்சார் ஈ) அறிவு

**60. வான்வழி அனுப்பீட்டு ரசீது --------- அசல் பாகங்களில் தயாரிக்கப்படுகிறது.**

அ) ஒன்று ஆ) இரண்டு **இ) மூன்று** ஈ) நான்கு

**61. ------------- ஒரு சரக்கேற்றி மூலம் பொருட்களைப் பெற்றுக் கொள்வதை ஏற்றுக் கொள்வதற்கான ஆவணம்**

**அ) வழிச்சீட்டு** ஆ) சரக்குக் குறிப்பு

இ) கப்பல் வாடகை ஒப்பாவணம் ஈ) ஒப்பந்த இரசீது

**62. மிக வேகமான போக்குவரத்திற்கான வழி என்ன?**

அ) தொடர்வண்டி ஆ) சாலை இ) கடல் **ஈ) விமானம்**

<u>அத்தியாயம் 15 காப்பீடு</u>

**63. காப்பீட்டின் அடிப்படைக் கோட்பாடு-------ஆகும்.**

அ) மிக்க நம்பிக்கை **ஆ) கூட்டுறவு**

இ) பகர உரிமை ஈ) அண்மைக் காரணம்

**64. -----------என்பது ஒரு பொதுக் காப்பீட்டு வகையினைச் சார்ந்தது அல்ல.**

அ) கடல் சார் காப்பீடு **ஆ) ஆயுள் காப்பீடு**

இ) மருத்துவ காப்பீடு ஈ) தீ காப்பீடு

**65. கீழ்கண்டவற்றுள் காப்பீடு ஒப்பந்தத்திற்கு பொருந்தாதது எது?**

**அ) தன்னிச்சை ஒப்பந்தம்** ஆ) நிபந்தனை ஒப்பந்தம்

இ) ஈட்டுறுதி ஒப்பந்தம் ஈ) பகிர்ந்தளித்தல்

**66. பின்வருவனவற்றில் எது கடல்சார் காப்பீட்டு வகையினைச் சார்ந்தது?**

அ) பணம் திரும்பத் திட்டாவணம் ஆ) பொருள்சார் காப்பீடு

**இ) கப்பல்சார் காப்பீடு** ஈ) ஆ மற்றும் இ

## அத்தியாயம் 16 இந்தியாவில் வளர்ந்து வரும் சேவைத் தொழில்கள்

**67. எந்த ஒரு தொடர்ச்சியான உறவு வணிகத்திற்கான உரிமத்தை வழங்குகிறது, பயிற்சி அளிக்கிறது, கிளை விற்பனை செய்வதை கருத்தில் கொள்வது ------------- என அழைக்கப்படுகிறது .**

**அ) தனி உரிமையியல்** ஆ) ஏட்டுக்கடன் முகமை

இ) அளிப்புத் தொடர் மேலாண்மை ஈ) பரிமாற்றம்

**68. மின்னணு வலைப்பின்னல்கள் மூலம் பொருட்களை வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் ---------- என அழைக்கப்படுகிறது.**

**அ) மின்னணு வணிகம்** ஆ) இணையதளம் இ) வலைதளம் ஈ) வர்த்தகம்

**69. உற்பத்தியாளரிடமிருந்து பொருட்களை நுகர்வோருக்கு எடுத்துச் செல்லும் செயலுக்கு ------------------- என பெயர்.**

**அ) போக்குவரத்து** ஆ) பெயர்ச்சியியல் இ) வழங்கள் முறை ஈ) சந்தையியல்

**70. பெயர்ச்சியியலின் முக்கிய நன்மை**

அ) உற்பத்தி மேம்பாடு **ஆ) செலவுகளை குறைத்தல்**

இ) இலாபம் ஈட்டுதல் ஈ) பண்டகக்காப்பு

**71. புற ஒப்படைப்பின் முக்கிய நன்மை -----------**

அ) உற்பத்தி திறன் **ஆ) செலவு குறைப்பு** இ) திறன் ஈ) அலகுகள்

## அத்தியாயம் 17 தொழிலின் சமூகப் பொறுப்புணர்வுகள்

**72. எந்த வகையான பொறுப்புணர்வு சமுதாயத்திற்கு நன்மை தரத்தக்கதாக உள்ளது.**

அ) சட்டம் ஆ) நெறிமுறை **இ) ஒழுங்குணர்வு** ஈ) பொருளாதாரம்

**73. சமூகப் பொறுப்புணர்வு தொழில் நிறுவனங்களின் பங்குதாரர்களை தவிர ------------- க்கும் உண்டு.**

அ) பங்குதாரர்கள் ஆ) பணியாளர்கள் இ) அரசு **ஈ) நிறுவனம்**

**74. தொழிலின் சமூகப் பொறுப்புணர்வு என்பது நிறுவனத்திற்கு எவ்வாறு உதவுகிறது?**

அ) இலாபத்தை அதிகரித்தல் ஆ) இலாபம்

**இ) நிலைத்தன்மை** ஈ) சமநிலை

**75. சமூகப் பொறுப்புணர்வு வணிகத்தில் பண்டங்களை வழங்குகிறது.**

அ) அதிக விலை ஆ) குறைந்த விலை

**இ) நியாயமான விலை** ஈ) மிதமான விலை

**76. பின்வருவனவற்றில் எது ஊழியர்களின் சமூகப் பொறுப்புணர்வு ஆகாது.**

அ) நியாயமான ஊதியம் ஆ) சரியான வசதிகள்

இ) சமூகப் பாதுகாப்பு **ஈ) சுரண்டல்**

## அத்தியாயம் 18 தொழில் நன்நெறிகள் மற்றும் நிறுவன ஆளுகை

**77. பின்வருவனவற்றில் எது சமுதாயத்திற்கு பொருட்களின் விற்பனையை அதிகரிக்கச் செய்ய உதவுகிறது?**

அ) வணிகத்தின் வெற்றி ஆ) விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள்

**இ) ஒழுக்கவியல்** ஈ) தொழில்முறை நிர்வாகம்

**78. நெறிமுறைகளுக்கான தேவைகள்-------------**

அ) உயர்மட்ட மேலாண்மை ஆ) நடுத்தர அளவிலான மேலாளர்கள்

இ) மேலாண்மையில் இல்லாத தொழிலாளர்கள் **ஈ) மேற்கண்ட அனைத்தும்**

**79. பின்வருவனவற்றில் எது ஒரு தொழில் நிறுவனத்தில் பயனுள்ள நன்னெறி நடைமுறைகளை உறுதி செய்யவில்லை?**
**அ) ஒரு வெளியீட்டின் குறியீடு** ஆ) பணியாளர்களின் ஈடுபாடு
இ) இணக்க வழிமுறைகளை நிறுவுதல் ஈ) இவற்றில் எதுவும் இல்லை

**80. தலைமை நிர்வாகத்தின் பங்கு என்பது, அதன் முழு அமைப்பு எதை நோக்கி வழிநடத்த வேண்டும்.**
அ) பொது நடத்தை ஆ) அமைப்பு நடத்தை
**இ) நேர்மையான நன்னெறி நடத்தை** ஈ) தனிநபர் நடத்தை

81. **நிலையான நடைமுறைகளுக்கு வழிவகுக்கும் பணியாளர்களின் நெறிமுறை நடத்தை என்பது----------** அ) நன்னடத்தை ஆ) நெறிமுறை நடத்தை
இ) மோசமான நடத்தை **ஈ) சரியாக முடிவெடுத்தல்**

<u>அத்தியாயம் 19 தொழில் நிதி மூலங்கள்</u>

**82. நிறுவனங்களுக்குத் தேவைப்படும் நேரத்தில் பணத்தை ஒதுக்கீடு செய்தல் கீழ்கண்டவாறு வரையறுக்கப்படுகிறது.**
**அ) நிதி மேலாண்மை** ஆ) வங்கி
இ) பண மேலாண்மை ஈ) இவற்றில் ஏதுமில்லை

**83. உட்புற நிதி மூலத்திற்கு எடுத்துக்காட்டு-----------**
அ) கடனாளிடமிருந்து பெறப்படும் தொகை
ஆ) வணிக வங்கிக் கடன்
இ) பங்கு வெளியீட்டின் மூலம் பெறப்படும் தொகை
**ஈ) தொழில் நிறுவனத்திற்குள் திரட்டப்படும் நிதி**

**84. கடன் பத்திரதாரர்கள் ஒரு நிலையான ------------விகிதம் பெற தகுதியுடையவர்கள்.**
அ) பங்காதாயம் ஆ) இலாபம் **இ) வட்டி** ஈ) இவை எதுவும் இல்லை

**85. பொது வைப்பு----------- இடமிருந்து நேரடியாகத் திரட்டப்பட்ட வைப்புத் தொகையாகும்.**
**அ) பொதுமக்கள்** ஆ) இயக்குனர்கள்
இ) தணிக்கையாளர்கள் ஈ) உரிமையாளர்கள்.

**86. நேர்மை பங்குதாரர்கள் ஒரு நிறுமத்தின்------------**
அ) கடனீந்தோர் **ஆ) உரிமையாளர்கள்**
இ) கடனாளிகள் ஈ) இவை எதுவுமில்லை

<u>அத்தியாயம் 20 பன்னாட்டு நிதி</u>

**87. அயல்நாட்டு பத்திர வெளியீட்டு உரிமை தரும் ஆவணம்**
அ) உரிமை சான்றிதழ் **ஆ) வைப்பு இரசீது**
இ) உரிமை இரசீது ஈ) மாற்றுப் பத்திரம்

**88. வைப்பு இரசீது வெளியீடு இதன் தேவை அதிகரிப்பை அடிப்படையாகக் கொண்டது**
**அ) பன்னாட்டு சந்தை** ஆ) உள்ளூர் சந்தை
இ) தற்போதைய பங்குதாரர்கள் ஈ) மேற்கண்ட அனைத்தும்

**89. அமெரிக்க வைப்பு இரசீது வெளியிடப்படுவது**
அ) கனடா ஆ) சீனா இ) இந்தியா **ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்**

**90. அமெரிக்க சந்தை தவிர்த்து, உலக சந்தையில் வெளியிடப்படும் வைப்பு இரசீது**

**அ) உலகளாவிய வைப்பு இரசீது** ஆ) பன்னாட்டு வைப்பு இரசீது

இ) வெளிச்சந்தை வைப்பு இரசீது ஈ) மாற்றுப் பத்திரம்

**91. -------------- என்பது நிறுமங்கள் அயல்நாட்டு செலாவணியை பெறுவதற்காகவே வெளியிடப்படும் ஒரு சிறப்பு வகை பத்திரமாகும்.**

அ) அரசு பத்திரங்கள் **ஆ) அந்நியச் செலாவணி மாற்று பத்திரம்**

இ) பெரு நிறுவன பத்திரங்கள் ஈ) உலகளாவிய வைப்பு இரசீது

## அத்தியாயம் 21 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள்

**92. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டு சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு**

அ) 2004 ஆ) 2007 **இ) 2006** ஈ) 2008

**93. நாட்டின் பொருளாதாரத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் --------------- பங்களிப்பு இன்றியமையாதவை.**

அ) தொழில்துறை உற்பத்தி ஆ) ஏற்றுமதி

இ) வேலைவாய்ப்பு **ஈ) மேற்கூறிய அனைத்தும்**

**94. சுய உதவி குழுக்கள் தங்கள் சேமிப்புத் தொகையை வசூலித்து ------------- ஏற்படுத்த வேண்டும்.**

அ) பொது நிதி **ஆ) குழு தொகுப்பு நிதி**

இ) குழு நிதி ஈ) மேலே குறிப்பிடப்பட்ட எதுவும் இல்லை

**95. சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் அளிக்க ------------ வேறுபட்ட முறைகள் உள்ளன.**

அ) 1 ஆ) 2 **இ) 3** ஈ) 4

**96. உற்பத்தித் துறையின் கீழ் ஒரு குறு நிறுவனத்தின் முதலீட்டு உச்சவரம்பு ------------ இலட்சத்திற்கு மிகக் கூடாது.**

அ) 10 ஆ) 20 **இ) 25** ஈ) 50

## அத்தியாயம் 22 வியாபாரத்தின் வகைகள்

**97. வெளிநாட்டிலிருந்து சரக்குகள் வாங்கப்படுவது ----------- என அழைக்கப்படும்.**

**அ) இறக்குமதி** ஆ) ஏற்றுமதி இ) மறு ஏற்றுமதி ஈ) மீண்டும் ஏற்றுமதி

**98. மீண்டும் ஏற்றுமதி செய்யும் நோக்குடன் இறக்குமதி செய்வது --------------**

அ) வெளிநாட்டு வியாபாரம் ஆ) உள்நாட்டு வியாபாரம்

**இ) மறு ஏற்றுமதி வியாபாரம்** ஈ) வியாபாரம்

**99. உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் இடையே இணைப்புச் சங்கிலியாக இருப்பது**

**அ) வியாபாரம்** ஆ) தொழிற்சாலை இ) வணிகம் ஈ) வர்த்தகம்

**100. உள்நாட்டு வியாபாரத்தின் நோக்கம்-------------**

அ) வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது

**ஆ) அத்தியாவசிய பொருட்களையும் சேவைகளையும் சிக்கன விலையில் வழங்குவது**

இ) தேசிய வருமானத்தை உயர்த்துவது

ஈ) அனைத்துப் பொருட்களையும் கிடைக்கச் செய்தல்

**101. உள்நாட்டு வியாபாரத்தை ------------ வகைகளாகப் பிரிக்கலாம்.**

அ) மூன்று ஆ) நான்கு **இ) இரண்டு** ஈ) ஐந்து

## அத்தியாயம் 23 வழங்கல் வழிகள்

**102. மொத்த வியாபாரியையும் நுகர்வோரையும் இணைக்கும் இணைப்புச் சங்கிலியாக செயல்படும் இடைநிலையர் ------------ ஆவார்.**

அ) உற்பத்தியாளர் ஆ) தரகர் **இ) சில்லறை வியாபாரி** ஈ) வாடிக்கையாளர்

**103. வழங்கல் வழியில் உள்ள முதல் இடைநிலையர் யார் ?**

**அ) மொத்த வியாபாரி** ஆ) உற்பத்தியாளர்

இ) சில்லறை வியாபாரி ஈ) வாடிக்கையாளர்கள்

**104. உற்பத்தியாளரிடம் பொருட்களை வாங்கிச் சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனை செய்பவர் --------------**

அ) உற்பத்தியாளர் **ஆ) மொத்த வியாபாரி**

இ) சில்லறை வியாபாரி ஈ) நுகர்வோர்கள்

**105. வாங்குபவரையும் விற்பவரையும் ஒருங்கிணைக்கும் பணியினை மேற்கொள்பவர்.**

**அ) தரகர்** ஆ) கழிவு முகவர்

இ) விற்பனை முகவர் ஈ) இருப்பு வைத்திருப்பவர்

**106. வியாபார இடைநிலையர்களை ---------- வகைகளாகப் பிரிக்கலாம்.**

அ) மூன்று **ஆ) இரண்டு** இ) ஐந்து ஈ) நான்கு

## அத்தியாயம் 24 சில்லறை வியாபாரம் செய்தல்

**107. சில்லரை வியாபாரிகள்-------------அளவில் பொருட்களை வைத்திருப்பர்**

**அ) சிறிய** ஆ) பெரிய இ) நடுத்தர ஈ) அளவான

**108. சிற்றளவு நிலையிட சில்லறை வியாபாரி என்பதனுள் ------------ அடங்குவர்.**

அ) இடம் பெயர் வியாபாரிகள் ஆ) சுமை தூக்கும் வியாபாரிகள்

**இ) பொதுப் பண்டக சாலைகள்** ஈ) வாகனத்தில் விற்போர்

**109. ஒரு குறிப்பிட்ட வகைப் பொருட்களை மட்டும் விற்கும் சில்லறைக் கடைகள் ------------ என அழைக்கப்படுகிறது.**

அ) சந்தை வியாபாரிகள் **ஆ) ஒரே வகைப் பண்டகச் சாலைகள்**

இ) பொதுப் பண்டகச் சாலைகள் ஈ) தெருக் கடை வியாபாரிகள்

**110. நிரந்தர இடமின்றி வெவ்வேறு இடங்களுக்குச் சென்று குறைந்த விலையுள்ள பொருட்களை வியாபாரம் செய்வோரை --------- என்பர்.**

அ) மடங்கு கடைகள் ஆ) முகவர்கள்

இ) தெருக் கடை வியாபாரிகள் **ஈ) சுற்றாடும் வியாபாரிகள்.**

<u>அத்தியாயம் 25 பன்னாட்டு வணிகம்</u>

**111. நாடுகளுக்கிடையே சரக்கு, சேவை, அறிவுசார் உரிமைகள், தொழில்நுட்பம் மற்றும் மனித உழைப்பு ஆகியவை இடம்பெயருவது-----------**

அ) பன்னாட்டு வியாபாரம் **ஆ) பன்னாட்டு வணிகம்**

இ) மறு ஏற்றுமதி வியாபாரம் ஈ) உள்நாட்டு வியாபாரம்

**112. சரக்கு இறக்குமதி செய்யப்பட்டு மீண்டும் ஏற்றுமதி செய்யப்பட்டால் அது ----------- எனப்படும்.**

அ) இறக்குமதி ஆ) ஏற்றுமதி

**இ) மறு ஏற்றுமதி வியாபாரம்** ஈ) பன்னாட்டு வியாபாரம்

**113. நாடுகளுக்கிடையே சரக்குகள் மற்றும் சேவைகள் மட்டும் பரிமாறிக் கொள்ளப்பட்டால் அது ---------- எனப்படும்.**

**அ) பன்னாட்டு வியாபாரம்** ஆ) பன்னாட்டு வணிகம்

இ) மறு ஏற்றுமதி வியாபாரம் ஈ) உள்நாட்டு வியாபாரம்

**114. உள்நாட்டிலிருந்து பொருட்கள் வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டால் அது ----------- எனப்படும்.**

அ) உள்நாட்டு வியாபாரம் **ஆ) ஏற்றுமதி**

இ) அயல் நாட்டு வியாபாரம் ஈ) இணைவினை

<u>அத்தியாயம் 26 ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடைமுறைகள்</u>

**115. EPC யின் விரிவாக்கம்**

அ) ஏற்றுமதி செயல்முறை குழு **ஆ) ஏற்றுமதி வளர்ச்சி குழு**

இ) ஏற்றுமதி சரக்கேற்றி குழு ஈ) ஏற்றுமதி வளர்ச்சி காங்கிரஸ்

**116. STC யின் விரிவாக்கம்**

அ) மாநில பயிற்சி மையம் ஆ) மாநில பயிற்சி சபை

இ) மாநில வணிக மையம் **ஈ) மாநில வணிக கழகம்**

**117. இறக்குமதியாளரால் தயாரிக்கப்பட்டு சரக்கை வாங்குவதற்கு ஏற்றுமதியாளருக்கு அனுப்பப்படும் ஆவணம் -------------- ஆகும்.**

அ) இடாப்பு **ஆ) சரக்காணை** இ) விசாரணை ஈ) கப்பல் வாடகை முறி

**118. கப்பல் தலைவரால் சரக்கு பெற்றுக் கொண்டதற்கு ஆதாரமாக வழங்கப்படும் இரசீது**

அ) அனுப்புகை இரசீது **ஆ) கப்பல் இரசீது**

இ) கப்பல் துணைத் தலைவர் இரசீது ஈ) வாணிகத் தூதுவர் இடாப்பு

**119. ஏற்றுமதியாளரால் சுங்க நடைமுறைகளைப் பின்பற்ற நியமிக்கப்படும் முகவர்**

**அ) அகற்றீட்டு முகவர்** ஆ) அனுப்புகை முகவர்

இ) கழிவு முகவர் ஈ) தன் பொறுப்பு முகவர்

**அத்தியாயம் 27 பன்னாட்டு வணிகத்தின் ஒருங்கிணைப்பாளர்கள்**

**120. சுங்க வரிகள் மற்றும் வாணிபம் மீதான பொது ஒப்பந்தம் கையெழுத்தான நாள்**

**அ) 30 அக்டோபர் 1947** ஆ) 29 அக்டோபர் 1947

இ) 28 அக்டோபர் 1947 ஈ) 26 அக்டோபர் 1947

**121. உலக வர்த்தக அமைப்பு உருவாக்கப்பட்ட நாள்**

அ) 1-1-1996 ஆ) 1-1-1997 **இ) 1-1-1995** ஈ) 1-1-1994

**122. உலக வர்த்தக அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள இடம்**

அ) நியூயார்க் ஆ) இலண்டன் **இ) ஜெனிவா** ஈ) பிரேசில்

**123. உலக வர்த்தக அமைப்பின் தினசரி அலுவல் ------------ டம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது**

அ) மேலாண்மைக் குழு **ஆ) பொதுக்குழு** இ) நிர்வாக குழு ஈ) பொதுச் சபை

**124. உலக வங்கி அமைந்திருப்பது**

**அ) வாஷிங்டன் DC** ஆ) நியூயார்க் இ) டோக்கியோ ஈ) ஹாங்காங்க்

**அத்தியாயம் 28 செலுத்தல் சமநிலை மற்றும் வாணிபச் சமநிலை**

**125. ஒரு நாட்டில் குடியிருப்போருக்கும் மற்றொரு நாட்டில் குடியிருப்போருக்கும் இடையே நடைபெறும் நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்ட அறிக்கை**

**அ) செலுத்தல் சம நிலை** ஆ) வாணிப சம நிலை

இ) பெறுதல் செலுத்தல் அறிக்கை ஈ) கணக்கியல் அறிக்கை

**126. செலுத்தல் சமநிலை உள்ளடக்கியது**

அ) நடப்பு கணக்கு ஆ) முதல் கணக்கு

இ) பெறுதல் செலுத்தல் கணக்கு **ஈ) நடப்பு கணக்கு மற்றும் முதல் கணக்கு**

**127. அயல்நாட்டு நீண்ட கால கடன் மற்றும் அயல்நாட்டு நாணய காப்பு பதியப்படுவது**

அ) அலுவல் சார்ந்த மூலதனம்

ஆ) தனியார் மூலதனம்

இ) வங்கி மூலதனம்

**ஈ) அலுவல் சார்ந்த மூலதனம் மற்றும் தனியார் மூலதனம்**

**128. அலுவல் சார்ந்த மூலதனம் என்பது**

அ) இந்திய ரிசர்வ் வங்கியின் அயல்நாட்டு நாணய மதிப்பு

ஆ) அரசின் சிறப்பு எடுப்பு உரிமை

**இ) அ மற்றும் ஆ இரண்டும்**

ஈ) அயல்நாட்டு மூலதனம்

**129. செலுத்து சமநிலையின் உபரி வெளிக்காட்டுவது**

**அ) ஏற்றுமதி இறக்குமதியை விட அதிகமாக இருத்தல்**

ஆ) இறக்குமதி ஏற்றுமதி இரண்டும் சமமாக இருத்தல்

இ) இறக்குமதி ஏற்றுமதி இரண்டும் சம நிலைக்கு அதிகமாக இருத்தல்

ஈ) இவையனைத்தும்

**அத்தியாயம் 29 ஒப்பந்தத்தின் கூறுகள்**

**130. சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஓ ர் உடன்படிக்கை**

அ) நிறைவேற்றக்கூடிய ஏற்பு ஆ) ஏற்றுக்கொள்ளப்பட்ட முனைவு

இ) ஒப்புக்கொண்ட வாக்குறுதி **ஈ) ஒப்பந்தம்**

**131. ஒரு நபர் மற்றொரு நபருக்கு செய்ய வேண்டிய மறுபயன் உருவாக்கும் ஒவ்வொரு உறுதிமொழியும், உறுதிமொழிகளின் தொகுதியும்**

**அ) உடன்பாடு** ஆ) ஒப்பந்தம் இ) முனைவு ஈ) ஏற்பு

**132. செல்லாத ஒப்பந்தம் குறிப்பது.**

அ) சட்டத்துக்கு முரணான ஒப்பந்தத்தின் இயல்பு

**ஆ) சட்டத்தால் நடைமுறைப்படுத்த முடியாத உடன்பாடு**

இ) சட்ட நடைமுறைகளை மீறுவதான ஒப்பந்தம்

ஈ) பொதுக் கொள்கைக்கு எதிரான உடன்பாடு

**133. செல்லுபடியாகக் கூடிய ஏற்பு**

அ) அறுதியிட்டுக் கூறுதல் ஆ) தகுதியற்றது

**இ) அறுதியிட்டுக் கூறுதல் மற்றும் தகுதியற்றது** ஈ) நிபந்தனையுடையது

**134. இளவருடன் செய்யும் ஒப்பந்தம்**

அ) செல்தகு ஒப்பந்தம் **ஆ) செல்லாத ஒப்பந்தம்**

இ) தவிர்தகு ஒப்பந்தம் ஈ) மற்றொரு தரப்பினரின் விருப்பத்தின் பேரில்

## அத்தியாயம் 30 ஒப்பந்த நிறைவேற்றம்

**135. செல்லத்தக்க நிறைவேற்றம் ஒப்பந்த நபர்கள் தங்களுடைய கடமையை செய்வது, அந்த ஒப்பந்தம்**

**அ) ஒப்பந்த நிறைவேற்றம்** ஆ) நடைமுறைப்படுத்தப்படும்

இ) செல்லாதது ஈ) இவை எதுவும் இல்லை

**136. பின்வரும் நபர்களில் யாரால் ஒப்பந்தம் நிறைவேற்ற முடியும்?**

அ) வாக்குறுதி வழங்குபவர் மட்டும்

ஆ) வாக்குறுதி வழங்குபவரின் சட்டப் பிரதிநிதிகள்

இ) வாக்குறுதி வழங்குபவரின் முகவர்

**ஈ) இவை அனைத்தும்**

**137. A, B, C, கூட்டு ஒப்பந்தத்தின்படி ₹ 50,000 D என்பவருக்கு செலுத்த வேண்டும் என ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதை நிறைவேற்றுவதற்கு முன் C இறந்து விடுகிறார். இங்கே, ஒப்பந்தம்**

அ) C யின் மரணத்தினால் ஒப்பந்தம் செல்லாது

**ஆ) C, சட்ட பிரதிநிதிகளுடன் சேர்ந்து A மற்றும் B ஆகியோரால் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டும்**

இ) A மற்றும் B மட்டும் தனியாக நிறைவேற்றப்பட வேண்டும்

ஈ) A ,B மற்றும் D க்கு இடையே ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட வேண்டும்.

**138. இவர்களில் யார் வாக்குறுதியின் நிறைவேற்றத்தை கோர முடியாது?**

அ) வாக்குறுதி பெறுபவர்

ஆ) கூட்டு வாக்குறுதி அளித்தவர்கள்

இ) ஒரு வாக்குறுதி பெறுபவர் மரணத்தின் போது, அவரது சட்டப் பிரதிநிதி

**ஈ) ஒப்பந்தத்திற்கு மூன்றாம் நபர்**

**139. மூன்றாம் நபர் என்று யாரை கூறுகின்றோம்?**

அ) வாக்குறுதி அளிப்பவர் ஆ) வாக்குறுதி பெறுபவர்

**இ) முகவர்** ஈ) சட்ட ரீதியான பிரதிநிதி

## அத்தியாயம் 31 ஒப்பந்த விடுவிப்பு மற்றும் ஒப்பந்த மீறுகை

**140. ஒரு செல்லத்தக்க ஒப்பந்த நிறைவேற்றத்தில் ஒப்பந்த நபரின் கடமை**
**அ) ஒப்பந்தம் விடுவிப்பு செய்யப்பட்டது** ஆ) நடைமுறைப்படுத்தப்படும்
இ) செல்லாதது ஈ) இவை எதுவும் இல்லை

**141. செயல்படாத ஒரு ஒப்பந்தம் சட்டப்பிரிவு 56 ன் கீழ்**
**அ) தவிர்க்க கூடியது** ஆ) செல்லாத
இ) செல்லக்கூடிய ஈ) நிறைவேற்ற முடியாதது

**142. பல்வேறு சூழ்நிலைகளில் ஒப்பந்தம் நிறைவேற்ற இயலாது அந்த ஒப்பந்தம்**
அ) தவிர்க்கக்கூடிய **ஆ) செல்லாதது**
இ) செல்லக்கூடியது ஈ) இவற்றில் எதுவும் இல்லை

**143. இருதரப்பு ஒப்பந்தத்தின் மூலம் விடுவிக்கப்படுவது**
அ) பரிமாற்றம் ஆ) இரத்து செய்தல்
இ) திருத்தம் **ஈ) மேலே கூறப்பட்டவை அனைத்தும்**

**144. ஒப்பந்த மீறலுக்கு கொடுக்கப்படும் இழப்பீடு**
**அ) சேதம்** ஆ) ஊதியம் இ) பணம் ஈ) காசோலை

## அத்தியாயம் 32 நேர்முக வரிகள்

**145. வருமான வரி என்பது**
அ) வியாபார வரி **ஆ) நேரடி வரி** இ) மறைமுக வரி ஈ) சேவை வரி

**146. கணக்கீட்டு ஆண்டு என்பது**
**அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை** ஆ) மார்ச்சு 1 முதல் பிப்ரவரி 28 வரை
இ) சூலை 1 முதல் சூன் 30 வரை ஈ) சனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை

**147. வருமானம் ஈட்டப்பட்ட ஆண்டு என்பது**
அ) கணக்கீட்டு ஆண்டு **ஆ) முந்தைய ஆண்டு**
இ) ஒளி ஆண்டு ஈ) நாட்காட்டி ஆண்டு

**148. ஐந்து தலைப்புகளின் கீழ் வரும் வருமானத்தின் கூடுதல் என்பது**
அ) முழு மொத்த வருமானம் **ஆ) மொத்த வருமானம்**
இ) ஊதிய வருமானம் ஈ) வியாபார வருமானம்

**149. இந்தியாவில் வேளாண்மை வருமானம் என்பது**
அ) முழுவதும் வரி விதிப்பிற்குட்பட்டது
**ஆ) முழுவதும் வரி விலக்கிற்குட்பட்டது**
இ) வருமானமாகக் கருதப்படுவதில்லை ஈ) மறைமுக வரி

## அத்தியாயம் 33 மறைமுக வரிகள்

**150. சரக்கு மற்றும் சேவை வரி குழுமத்தின் தலைவர் யார்?**
அ) இந்திய ரிசர்வ் வங்கியின் தலைவர் **ஆ) நிதி அமைச்சர்**
இ) பிரதம மந்திரி ஈ) இந்திய குடியரசுத் தலைவர்

**151. GST - ன் விரிவாக்கம்**
அ) சரக்கு மற்றும் அளிப்பு வரி ஆ) அரசு விற்பனை வரி
**இ) சரக்கு மற்றும் சேவை வரி** ஈ) பொது விற்பனை வரி.

**152. சரக்கு மற்றும் சேவை வரி என்பது**

அ) நேரடி வரி **ஆ) மறைமுக வரி**

இ) சரக்கு மற்றும் சேவைகளின் வகையை பொறுத்தது

ஈ) வியாபார நடவடிக்கைகளைச் சார்ந்தது

**153. IGST என்பது**

**அ) ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி**

ஆ) இந்திய சரக்கு மற்றும் சேவை வரி

இ) ஆரம்ப சரக்கு மற்றும் சேவை வரி ஈ) மேற்கூறிய அனைத்தும்

**154. சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறை நடைமுறைப்படுத்தப்பட்ட நாள்**

அ) ஏப்ரல் 1, 2017 ஆ) சனவரி 1, 2017 **இ) சூலை 1, 2017** ஈ) மார்ச்சு 1, 2017

## ஒரு மதிப்பெண் விடைகள்

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | அ | 26 | அ | 51 | ஆ | 76 | ஈ | 101 | இ | 126 | ஈ | 151 | இ |
| 2 | அ | 27 | இ | 52 | ஈ | 77 | இ | 102 | இ | 127 | ஈ | 152 | ஆ |
| 3 | அ | 28 | இ | 53 | அ | 78 | ஈ | 103 | அ | 128 | இ | 153 | அ |
| 4 | இ | 29 | ஆ | 54 | ஆ | 79 | அ | 104 | ஆ | 129 | அ | 154 | இ |
| 5 | அ | 30 | அ | 55 | இ | 80 | இ | 105 | அ | 130 | ஈ | | |
| 6 | அ | 31 | அ | 56 | ஈ | 81 | ஈ | 106 | ஆ | 131 | அ | | |
| 7 | இ | 32 | இ | 57 | அ | 82 | அ | 107 | அ | 132 | ஆ | | |
| 8 | ஈ | 33 | இ | 58 | இ | 83 | ஈ | 108 | இ | 133 | இ | | |
| 9 | இ | 34 | ஆ | 59 | ஆ | 84 | இ | 109 | ஆ | 134 | ஆ | | |
| 10 | இ | 35 | ஆ | 60 | இ | 85 | அ | 110 | ஈ | 135 | அ | | |
| 11 | இ | 36 | அ | 61 | அ | 86 | ஆ | 111 | ஆ | 136 | ஈ | | |
| 12 | அ | 37 | ஈ | 62 | ஈ | 87 | ஆ | 112 | இ | 137 | ஆ | | |
| 13 | அ | 38 | ஆ | 63 | ஆ | 88 | அ | 113 | அ | 138 | ஈ | | |
| 14 | ஈ | 39 | ஆ | 64 | ஆ | 89 | ஈ | 114 | ஆ | 139 | இ | | |
| 15 | ஆ | 40 | இ | 65 | அ | 90 | அ | 115 | ஆ | 140 | அ | | |
| 16 | ஆ | 41 | அ | 66 | இ | 91 | ஆ | 116 | ஈ | 141 | அ | | |
| 17 | ஆ | 42 | ஈ | 67 | அ | 92 | இ | 117 | ஆ | 142 | ஆ | | |
| 18 | ஆ | 43 | ஆ | 68 | அ | 93 | ஈ | 118 | ஆ | 143 | ஈ | | |
| 19 | ஆ | 44 | அ | 69 | அ | 94 | ஆ | 119 | அ | 144 | அ | | |
| 20 | ஆ | 45 | ஆ | 70 | ஆ | 95 | இ | 120 | அ | 145 | ஆ | | |
| 21 | அ | 46 | ஆ | 71 | ஆ | 96 | இ | 121 | இ | 146 | அ | | |
| 22 | இ | 47 | அ | 72 | இ | 97 | அ | 122 | இ | 147 | ஆ | | |
| 23 | இ | 48 | இ | 73 | ஈ | 98 | இ | 123 | ஆ | 148 | ஆ | | |
| 24 | ஈ | 49 | ஈ | 74 | இ | 99 | அ | 124 | அ | 149 | ஆ | | |
| 25 | ஈ | 50 | இ | 75 | இ | 100 | ஆ | 125 | அ | 150 | ஆ | | |

## குறுவிடை வினாக்கள் ( இரண்டு மதிப்பெண்கள்)

**1. பண்டமாற்று முறை என்றால் என்ன?**
ஒரு பொருளுக்கு மாற்றாக மற்றொரு பொருள் பரிமாற்றம் செய்யப்படுவது.

**2. நாளங்காடி என்றால் என்ன?**
பகல் நேரத்தில் நடைபெறும் வியாபாரம்

**3. அல்லங்காடி என்றால் என்ன?**
இரவு நேரத்தில் நடைபெறும் வியாபாரம்

**4. பொருளாதார நடவடிக்கைகள் என்றால் என்ன?**
இலாபம் ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து பொருளாதார நடவடிக்கைகள் ஆகும்.

**5. தொழில் என்றால் என்ன?**
தொழில் என்பது இலாபம் ஈட்டும் நோக்கத்துடன் செயல்படும் வணிக நடவடிக்கை ஆகும்.

**6. வேலை என்றால் என்ன?**
கூலி அல்லது ஊதியத்திற்காக மற்றவர்களுக்கு பணி ஆற்றுவது ஆகும்.

**7. வணிகத்தை வரையறு.**
“பொருட்களை வாங்கலும் விற்றலும் உள்ளடக்கியதே” ஆகும் - எவ்லின் தாமஸ்

**8. உற்பத்தித் தொழில் என்றால் என்ன?**
தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மூலப்பொருளை முடிவுற்ற பொருளாக மாற்றுவது ஆகும்.

**9. வியாபாரம் என்றால் என்ன?**
“பொருட்களை வாங்கலும் விற்றலும் உள்ளடக்கியதே” ஆகும்.

**10. கர்த்தா என்பவர் யார்?**
இந்து கூட்டுக் குடும்பத்தின் வியாபாரத்தை கட்டுப்படுத்துவது மற்றும் மேலாண்மை செய்யும் நபர்

**11. இந்துச் சட்டத்தின் இரண்டு பிரிவுகள் யாவை?**
1. தயாபாகா 2. மிட்டாக்சரா

**12. கூட்டாளி என்பவர் யார்?**
- இரண்டுக்கு மேற்பட்ட நபர்கள் ஒன்று சேர்வது கூட்டாண்மை.
- ஒவ்வொருவரும் தனித்தனியாக கூட்டாளியாவார்.

**13. உறங்கும் கூட்டாளி என்பவர் யார்?**
- நிறுவனத்தில் முதலிடுவார்.
- மேலாண்மையில் பங்கேற்க மாட்டார்.

**14. கூட்டாண்மை கலைப்பு எத்தனை வகைப்படும்?**
1. நிறுவனக் கலைப்பு 2. கூட்டாண்மை கலைப்பு

**15. நிறுமம் வரைவிலக்கணம் தருக.**
இந்திய நிறுமச் சட்டம் பிரிவு 2 (20) 2013-ன் படி நிறுமம் என்பது "நீடித்த வாழ்வுடனும், நிலைபேற்றுத் தொடர்ச்சியுடனும், பொது முத்திரையுடன் கூடிய சட்டத்தால் உருவாக்கப்பட்ட புனைவு நபர்" ஆகும்.

**16. வரையறு பொறுப்பு என்றால் என்ன?**
ஒவ்வொரு பங்குதாரர்களின் பொறுப்பும் அவர் வைத்துள்ள பங்குகளின் செலுத்தப்படாத தொகைக்கு மட்டுமே வரையறை செய்யப்பட்டுள்ளது.

**17. பட்டைய (அ) சாசன நிறுமம் என்றால் என்ன?**
ஒரு நாட்டின் அரசராலோ, அரசியாலோ வழங்கப்பட்ட சாசனத்தின் விளைவாக உருவாக்கப்படும் நிறுமங்கள்.

**18. கூட்டுறவு வரையறு.**
H.கால்வேர்ட் அவர்களின் கூற்றுப்படி “கூட்டுறவு சங்கம் என்பது உறுப்பினர்களின் பொருளாதார நலனைப் பெருக்கிக் கொள்வதற்காக மனிதர்கள் என்ற முறையில் சமத்துவ அடிப்படையில் மக்கள் அவர்களாகவே ஒன்றுபடும் அமைப்பே கூட்டுறவு”

**19. இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார்?**
- இங்கிலாந்தில் 1844 ஆம் ஆண்டு இராபர்ட் ஓவன் என்பவர் 28 நெசவாளர் கொண்டு “ராக்டேல்”என்ற பெயரில் சங்கத்தை உருவாக்கினார்.
- இராபர்ட் ஓவன் என்பவர் கூட்டுறவின் தந்தை ஆவார்.

**20. பன்னாட்டு நிறுமம் - இலக்கணம் வரைக.**
"பன்னாட்டு நிறுமம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் வியாபாரத்தை நடத்துவதாகும்"- **நைல். H. ஜேகோபி**

**21. பன்னாட்டு நிறுமத்திற்கு ஏதேனும் இரண்டு உதாரணங்கள் தருக.**
1. பாட்டா 2. சுசூகி 3. சோனி 4. கோல்கேட்

**22. பொது கழகங்களுக்கு இரண்டு உதாரணங்களை குறிப்பிடுக.**
1. LIC 2. இந்தியன் ஏர்லைன்ஸ் 3. ஏர் இந்தியா

**23. துறைவாரி அமைப்புகளுக்கு இரண்டு உதாரணங்களை குறிப்பிடுக.**
1. இந்திய ரயில்வே 2. தபால் தந்தி 3. வானொலி

**24. வியாபாரத்தின் பொருள் தருக.**
இலாபம் ஈட்டும் நோக்கில் பொருட்களையும் சேவைகளையும் வாங்கி விற்பது.

**25. உள்நாட்டு வியாபாரம் என்றால் என்ன?**
ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறும் வியாபாரம் ஆகும்.

**26. இறக்குமதி என்றால் என்ன?**
வெளிநாட்டில் இருந்து பொருட்களை வாங்குவது.

**27. மறு ஏற்றுமதி என்பதன் பொருள் யாது?**
ஒரு நாட்டில் இருந்து இறக்குமதி செய்த பொருட்களை வேறு நாட்டிற்கு ஏற்றுமதி செய்வது.

**28. இடைநிலையர் என்பவர் யார்?**
உற்பத்தியாளிடமிருந்து நுகர்வோர் வரை பொருட்கள் பரிமாற்றத்தில் ஈடுபட்டுள்ள அனைவரும்.

**29. சில்லறை வியாபாரி வரைவிலக்கணம் தருக.**
"நுகர்வோரின் தேவைகளைச் செவ்வனே பூர்த்தி செய்யும் பொருளாதாரச் சங்கிலியில் இறுதியாக இருப்பவர் சில்லறை வியாபாரி ஆவார்" - **ஈவ்லின் தாமஸ்**

**30. தரகர் என்பவர் யார்?**
மற்றவர்களுக்காக பேரம் பேசி வியாபாரத்தை இலாபகரமாக முடித்து கொடுத்து அதற்கெனக் கழிவு பெறும் நபர்.

**31. வியாபார இடைநிலையரின் வகைகள் தருக.**
1. மொத்த வியாபாரி 2. சில்லறை வியாபாரி

**32. தானியங்கி விற்பனை எந்திரங்கள் என்றால் என்ன?**
விற்பனையாளர் இன்றி எந்திரம் வழியாக பொருட்களை விற்பது.

**33. பண்டகக் காப்பகங்கள் என்றால் என்ன?**
பொருட்களை பாதுகாத்து வைக்கும் இடம்.

**34. வருமான வரி என்றால் என்ன?**
ஒரு நபரின் வருமானத்தின் மீது சுமத்தப்படும் வரி.

**35. முந்தைய ஆண்டு என்றால் என்ன?**
வருமானம் ஈட்டப்பட்ட ஆண்டு முந்தைய ஆண்டு எனப்படுகிறது.

**36. கணக்கீட்டு ஆண்டு என்றால் என்ன?**
ஏப்ரல் 1-ஆம் தேதி தொடங்கி அடுத்த ஆண்டு மார்ச் 31-ஆம் தேதி முடியும் வரை.

**37. மறைமுக வரியின் பொருள் தருக.**
விற்பனையாளரால் வாங்குபவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு பின்னர் அரசுக்கு செலுத்தப்படும் வரி.

**38. இந்தியாவில் விதிக்கப்படும் மறைமுக வரிக்கு ஏதேனும் இரண்டு உதாரணங்கள் தருக.**
1. சுங்கவரி 2. சரக்கு மற்றும் சேவை வரி 3. மதிப்புக் கூட்டு வரி

**39. சரக்கு மற்றும் சேவை வரி என்றால் என்ன?**
சரக்கு மற்றும் சேவை வரி என்பது சரக்கு மற்றும் சேவைகள் நகரும்போது விதிக்கப்படும் வரி ஆகும்.

**40. மத்திய சரக்கு மற்றும் சேவை வரி என்றால் என்ன?**
ஒரு மாநிலத்துக்குள்ளே அளிக்கப்படும் சரக்குகள் மீது மத்திய அரசால் வசூலிக்கப்படும் வரி ஆகும்.

**41. வணிக வங்கிகளின் பொருள் தருக.**
பொதுமக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, இலாபம் சம்பாதிப்பதற்காக, குறைந்த வட்டியில் கடன்களை வழங்கும் வங்கிகள் வணிக வங்கிகள் எனப்படும்.

**42. வெளிநாட்டு வங்கிகள் என்றால் என்ன?**
வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்டு இந்தியாவில் கிளை அலுவலகத்தை கொண்ட வங்கிகள், வெளிநாட்டு வங்கிகள் ஆகும்.

**43. பற்று அட்டை (Debit Card) - சிறு குறிப்பு வரைக.**
தானியங்கி பணம் வழங்கும் அட்டையே ( ATM Card) பற்று அட்டை (Debit Card) என்றும் அழைக்கப்படுகிறது.

**44. அடகுக் கடன் என்றால் என்ன?**
தனக்குச் சொந்தமானப் பொருளை அடகு வைத்து கடன் பெறுவது ஆகும்.

**45. வைப்பு இரசீது என்றால் என்ன?**
வெளிநாட்டு நிறுவனத்தில் பங்குகள் வாங்கியதற்கு சான்றாக, வங்கியால் வழங்கப்படும் ஒரு ஆவணமாகும்..

**46. சுய உதவிக் குழு என்றால் என்ன?**
ஒரு சிறிய முறைசாரா தன்னார்வச் சங்கம் ஆகும்.

**47. சரக்காணை என்றால் என்ன?**
சரக்கை ஏற்றுமதி செய்வதற்கான ஒரு ஆதாரம் சரக்காணை ஆகும்.

**48. நாணய உறுதிக் கடிதம் என்றால் என்ன?**
பணம் தருவதாக வங்கி அளிக்கும் உறுதிமொழி அடங்கிய கடிதம்

**49. ஒப்பந்தம் என்றால் என்ன?**
சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஓர் உடன்படிக்கை ஒப்பந்தம் ஆகும்.

**50. முகவர் என்பவர் யார்?**
ஒப்பந்தங்களில் ஈடுபட நியமிக்கப்பட்ட நபர்

## சிறு விடை வினாக்கள் (மூன்று மதிப்பெண்கள்)

**1. வணிகம் பொருள் தருக.**

பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு நுகர்வோரிடம் கொண்டு சேர்ப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது.

**2. மருவூர்ப்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கம் விளக்குக**

- மருவூர்ப்பாக்கம் – உள்நாட்டு நகரம்
- பட்டினப்பாக்கம் – கடலோர நகரம்

**3. பாண்டியர் ஆட்சி காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?**

1. கொற்கை 2. சாலியூர் 3. காயல்பட்டினம் 4. மருங்காவூர்ப்பட்டினம் 5. குமரி

**4. மனித செயல்பாடுகள் என்றால் என்ன? விளக்குக.**

மனிதன் தனிப்பட்ட விருப்பங்களையும் தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள மேற்கொள்ளும் நடவடிக்கைகள்.

**5. சிறுகுறிப்பு வரைக**

**அ) தொழில் ஆ) சிறப்புத் தொழில்**

**அ) தொழில்:**

இலாபம் ஈட்டும் நோக்கத்துடன் செயல்படும் வணிக நடவடிக்கை ஆகும்.

**ஆ) சிறப்புத் தொழில்:**

அந்தந்த துறையால் அதற்கென நிர்ணயம் செய்யப்பட்ட உயர்கல்வி தகுதி மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களால் வழங்கப்படும் பணிகள் ஆகும்.

**எகா:** வழக்கறிஞர்கள், மருத்துவர்கள்,

**6. தொழில் நடவடிக்கைகளின் வகைகள் யாவை?**

1. உற்பத்தி தொழில் 2. வணிகம்

**7. சேவைத் தொழில்கள் என்றால் என்ன?**

- பொருட்களை உற்பத்தி செய்வதில்லை.
- சேவை பொருட்களை இலாபத்திற்கு விற்கின்றன.
- **எகா:** வங்கி, கல்விச் சேவை,

**8. போக்குவரத்து - சிறு குறிப்பு வரைக.**

உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோர்களுக்கு பொருட்களை கொண்டு சேர்ப்பது போக்குவரத்து ஆகும்.

**9. ஐவகை வருமானத் தலைப்புகளை வரிசைப்படுத்துக.**

1. சம்பளம்
2. வீட்டு சொத்திலிருந்து வருமானம்
3. தொழிலின் இலாபங்கள்
4. மூலதன ஆதாயங்கள்
5. பிற வருமானம்

**10. குறிப்பு வரைக. அ) நேரடி வரி ஆ) மறைமுக வரி**

**அ) நேரடி வரி**

தனிநபரின் வருமானத்தின் மீது விதிக்கப்படும் வரி

உதாரணம்: 1. வருமான வரி 2. சொத்து வரி

**ஆ) மறைமுக வரி**

விற்பனையாளர் மீது வரி விதிக்கப்பட்டு வாங்குபவரால் செலுத்தப்படும் வரி

உதாரணம்: சரக்கு மற்றும் சேவை வரி (GST)

**11. நபர் என்ற சொல்லில் யாரெல்லாம் அடங்குவர்?**

1. தனிநபர்
2. இந்து கூட்டுக் குடும்பம்
3. கூட்டு பங்கு நிறுமம்
4. கூட்டாண்மை நிறுவனம்
5. கூட்டுறவு சங்கம்
6. செயற்கை நபர்கள்

**12. சரக்கு மற்றும் சேவை வரியின் நோக்கங்கள் யாவை (ஏதேனும் 3)**

1. சமமான வரி விகிதம்
2. வரி வருவாயை அதிகரித்தல்
3. ஏற்றுமதியினை ஊக்குவித்தல்

**13. சரக்கு மற்றும் சேவை வரியின் குறைபாடுகள் மூன்றினை எழுதுக.**

1. எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது
2. ஜவுளிப் பொருட்கள் விலை அதிகரித்துள்ளது
3. கட்டணம் இரண்டு மடங்காக உள்ளது

**கூடுதல் வினாக்கள்**

**14. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?**

- தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறாப் பொறுப்பு.
- வியாபார கடன்களுக்கு தன் சொந்த சொத்திலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும்.

**15. தனியாள் வணிகத்திற்கு சில உதாரணங்களைக் கூறுக.**

1. பெட்டிக்கடை
2. அழகு நிலையங்கள்
3. அடுமனைகள்
4. தையலகம்
5. பழ வியாபாரம்
6. பூ வியாபாரம்
7. சலவை நிலையம்

**16. கூட்டாண்மை நிறுவனத்தில் குறைந்தபட்ச அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது?**

- குறைந்தபட்சம் **2** பேர்
- அதிகபட்சம் **50** பேர்

**17. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?**

- இரண்டுக்கு மேற்பட்ட நபர்களுக்கு இடையேயான ஓர் உடன்பாடு.
- விதிகள் உள்ளடங்கிய எழுத்து வடிவிலான ஓர் ஆவணம்

**18. அரசு நிறுமம் என்றால் என்ன?**

ஒரு நிறுமத்தின் பங்கு முதலில் 51 % க்கு மேல் மத்திய, மாநில அரசு பெற்றிருந்தால் அது அரசு நிறுமம் என்று அழைக்கப்படும்.

**19. பயிர்/ வேளாண்மை காப்பீட்டின் பொருள் தருக.**

வறட்சி, வெள்ளம் போன்ற காரணங்களால் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படும்போது இழப்பீடு வழங்குவதற்காக செய்யப்படும் காப்பீடு பயிர்/ வேளாண்மை காப்பீடு ஆகும்.

**20. பண்டகக்காப்பாளர் இரசீது பண்டகச் சான்றாணை வேறுபடுத்துக. (ஏதேனும் 3)**

| பண்டகசான்றாணை | பண்டகக் காப்பாளர் ரசீது |
|---|---|
| 1. உரிமை மாற்றத்தை ஏற்படுத்தும் ஆவணம். | உரிமை மாற்றத்தை ஏற்படுத்தும் ஆவணமல்ல. |
| 2. மற்றவருக்கு மாற்ற இயலும். | மாற்றி தர இயலாது |
| 3. பிணையமாக வைக்க முடியும். | பிணையமாக வைக்க முடியாது. |

## பெருவிடை வினாக்கள் (ஐந்து மதிப்பெண்கள்)

**1. வணிகத்தின் பல்வேறு தடைகளைக் கூறுக (ஏதேனும் 5)**

**1. ஆள்சார் தடை:- வியாபாரம்**
உற்பத்தியாளரும் நுகர்வோரும் சந்திப்பதற்கு வாய்ப்பே இல்லை. "**வியாபாரம்**" இக்குறைபாட்டை நீக்க உதவுகிறது.

**2. இடத்தடை:- போக்குவரத்து**
உற்பத்தி செய்த பொருட்களை நுகர்வோர்களுக்கு கொண்டு செல்ல இயலாத நிலை. இத் தடையை **போக்குவரத்து** நீக்குகிறது.

**3. காலத்தடை:- பண்டகக்காப்பகங்கள்**
ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் ஆண்டு முழுவதும் நுகர்வோருக்கு கிடைக்க வழி செய்வது **பண்டகக்காப்பகங்கள்.**

**4. அறிவுசார் தடை:- விளம்பரம்**
நுகர்வோர் தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்க இயலாமல் போய்விடக்கூடும். "**விளம்பரம்** இத்தடையை நீக்குகிறது.

**5. நிதித்தடை:- வங்கி**
உற்பத்தியாளர்களின் நிதி தடையை "**வங்கி** நீக்குகிறது.

**2. பண்டமாற்று முறைக்கான நிபந்தனைகளாகக் கூறப்பட்டுள்ளன யாவை?**

1. ஒவ்வொருவரும் தேவைக்கு அதிகமாக பொருட்களை இருப்பில் வைத்திருக்க வேண்டும்.
2. இருவருக்கும் அப்பொருட்கள் உரிமை மாற்றுத் தேவையாக இருக்க வேண்டும்.
3. பரிமாற்றத்தின் போது இருவருக்கும் நேரடி தொடர்பு முக்கியமாக கருதப்படும்.

**3. பண்டைய தமிழ்நாட்டில் கடற்கரையோர வர்த்தகம் பற்றி விளக்குக.**

**1. நகரங்கள்:-**
1. மருவூர்ப்பாக்கம் – உள்நாட்டு நகரம் 2. பட்டினப்பாக்கம் – கடலோர நகரம்

**2. துறைமுகங்கள்:-**
தொண்டி, கொற்கை, பூம்புகார் மற்றும் முசிறி

**3. பணிகள்:-**
மீன்பிடித்தல் உப்பு உற்பத்தி, கப்பல் கட்டுதல்

**4. கடல் போக்குவரத்து:-**
- படகு, திமிலா, தோணி, அம்பு, ஓடம்புனை, கட்டுமரம்
- பேரளவு கலம், மரக்கலம், வங்கம், நாவாய்

**5. வர்த்தக பொருட்கள்:-**
முத்துக்கள், பவளங்கள், பட்டு,

**4. தொழிலின் சிறப்பியல்புகள் யாவை (ஏதேனும் 5)**

**1. உற்பத்தி செய்தல்**
பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும்.

**2. விற்பனை**
பொருட்கள் மற்றும் சேவைகளை விற்பனை செய்தல் ஆகும்.

**3. பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்புடையது**
மின்சாரம், எரிவாயு, குடிநீர், போக்குவரத்து, வங்கி, காப்பீடு

**4. இலாப நோக்கம்**
தொழிலின் மிக முக்கிய தன்மை இலாபம் ஈட்டுவதாகும்.

**5. இடர்பாட்டிற்கான கூறு**
தொழிலின் இலாபம் ஈட்டுதல் என்பது நிச்சயமற்றதாகும்.

**5. தொழில், சிறப்பு தொழில் மற்றும் வேலைவாய்ப்பு ஓர் ஒப்பீடு செய்க.** (ஏதேனும் 5)

| வ. எண் | அடிப்படை | தொழில் | சிறப்புத் தொழில் | வேலைவாய்ப்பு |
|---|---|---|---|---|
| 1. | **பணியின் தன்மை** | இலாபம் ஈட்டும் நோக்கத்துடன் செயல்படும் வணிக நடவடிக்கை | சிறப்புத் தேர்ச்சி பெற்ற சேவையை வழங்குதல் | பணியாளர்களுக்கு வழங்கிய செயலைச் செய்தல் |
| 2. | **தகுதி** | ஏதுமில்லை | சிறப்பு தகுதியும் | தேவையில்லை |
| 3. | **வெகுமதி** | இலாபம் | கட்டணம் | கூலி / சம்பளம் |
| 4. | **இடர்** | இலாபம் நிச்சயமற்றதாகும். | கட்டணம் நிலையானது | இடர் ஏதும் இல்லை. |
| 5. | **உரிமை மாற்றம்** | செய்யப்படும். | செய்ய இயலாது. | செய்ய முடியாது. |

**6. தொழிலின் நோக்கங்களை விவரி**

**1. பொருளாதார நோக்கம்**
இலாபம் ஈட்டுவது

**2. சமூக நோக்கங்கள்**
சமுதாயத்திற்கு நன்மை அளிப்பதாக இருக்க வேண்டும்.

**3. நிறுவன நோக்கங்கள்**
பொருளாதாரத்திற்கு உதவுவது.

**4. மனிதன் நோக்கங்கள்**
இயலாதவர்கள், ஏழ்மையில் உள்ளவர்கள் நலன் காப்பது

**5. தேசிய நோக்கங்கள்**
மக்களுக்கு வேலை வாய்ப்பை அளிப்பது

7. **உற்பத்தித் தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் - ஓர் ஒப்பீடு செய்க.** (ஏதேனும் 5)

| வ. எ | அடிப்படை | உற்பத்தி தொழில் | வணிகம் | வியாபாரம் |
|---|---|---|---|---|
| 1. | **பொருள்** | பொருட்களைத் தயாரித்தல் | பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதல் | கொள்முதல் மற்றும் விற்பனை |
| 2. | **முதல்** | அதிக அளவு | குறைந்த அளவு | போதுமான அளவு |
| 3. | **இடர்பாடு** | அதிகம் | குறைவு | குறைவு |
| 4. | **பரிமாணம்** | அளிப்பு | தேவை | அளிப்பு மற்றும் தேவை |
| 5. | **பயன்பாடு** | உருவப் பயன்பாடு | இடப் பயன்பாடு | உடைமை பயன்பாடு |

**8. சிறு குறிப்பு வரைக**

**அ) பகுப்பாய்வு உற்பத்தி தொழில்**
மூலப்பொருளிலிருந்து பல்வேறு வகையானப் பொருட்களை பிரித்தல்
**எகா:** பெட்ரோல், டீசல்

**ஆ) மரபு சார் உற்பத்தித் தொழில்கள்**
தாவரங்களும், மிருகங்களும் நுகர்வோரின் உபயோகத்திற்காக வளர்க்கப்படுவன.
**எகா:** கால்நடைகள் ,கோழி,மீன்

**இ) கட்டுமானத் தொழில்கள்**

கட்டிடங்கள், பாலங்கள், சாலைகள் கட்டத் தேவையான பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை

**9. வருமானம் என்ற சொல்லில் அடங்கியுள்ளவை யாவை?**

1. தொழிலில் ஏற்பட்ட இலாபம்
2. பங்காதாயம் பெற்றது
3. நன்கொடை பெற்றது
4. குதிரைப் பந்தயம், சீட்டு விளையாட்டு மூலம் பெற்றது.
5. மூலதன ஆதாயம் பெற்றது

**10. நேரடி மற்றும் மறைமுக வரியை உதாரணத்துடன் விளக்குக.**

**1. நேரடி வரி**

தனிநபரின் வருமானத்தின் மீது விதிக்கப்படும் வரி

உதாரணம்: 1. வருமான வரி 2. சொத்து வரி

**2. மறைமுக வரி**

விற்பனையாளர் மீது வரி விதிக்கப்பட்டு வாங்குபவரால் செலுத்தப்படும் வரி

உதாரணம்: சரக்கு மற்றும் சேவை வரி (GST)

**11. நேரடி வரியையும் மறைமுக வரியையும் வேறுபடுத்துக. (ஏதேனும் 5)**

| அடிப்படை | நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|---|
| **1. பொருள்** | தனிநபரின் வருமானத்தின் மீது விதிக்கப்படும் வரி | விற்பனையாளர் மீது வரி விதிக்கப்பட்டு வாங்குபவரால் செலுத்தப்படும் வரி |
| **2. ஏய்ப்பு** | வாய்ப்பு உண்டு. | வாய்ப்பு குறைவு |
| **3. பணவீக்கம்** | குறைக்க உதவுகிறது. | ஊக்குவிக்கிறது. |
| **4. மாற்றுதல்** | மாற்ற முடியாது | மாற்ற முடியும். |
| **5. உதாரணங்கள்** | சொத்துவரி, வருமானவரி | சரக்கு மற்றும் சேவை வரி (GST) |

**12. சரக்கு மற்றும் சேவை வரியின் வகைகளை விளக்குக.**

**1. மத்திய சரக்கு மற்றும் சேவை வரி (CGST)**

ஒரு மாநிலத்துக்குள் அளிக்கப்படும் சரக்குகள் மீது மத்திய அரசால் வசூலிக்கப்படுவது

**2. மாநில சரக்கு மற்றும் சேவை வரி (SGST)**

மாநில அரசால் வசூலிக்கப்படும் வரி

**3. யூனியன் பிரதேச சரக்கு மற்றும் சேவை வரி (UGST)**

யூனியன் பிரதேசங்களால் வசூலிக்கப்படும் வரி

**4. ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி (IGST)**

மத்திய அரசால் வசூலிக்கப்பட்டு, மாநில அரசுகளுக்கு இடையே பகிர்ந்து கொள்ளப்படுவது

**5. ஏற்றுமதி மீதான சரக்கு மற்றும் சேவை வரி (IGST On Export)**

ஏற்றுமதி மீதான வரி பூஜ்ஜியம்

## கூடுதல் வினாக்கள்

**13. கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கம் யாது? (ஏதேனும் 5)**

1. கூட்டாண்மையின் பெயர் :
2. தொழிலின் தன்மை :
3. முதல் :
4. முதல் மீது வட்டி :
5. எடுப்பு :
6. எடுப்பு மீது வட்டி :
7. இலாப-நட்ட பகிர்வு :
8. கடன் :
9. சம்பளம் மற்றும் கழிவு :
10. நற்பெயர் :

**14. கூட்டாண்மை நிறுவனத்தை பதிவு செய்ய பின்பற்றப்படும் நடைமுறைகளை விவரி. (ஏதேனும் 5)**

வினா எண் 13-க்கு உரிய விடையையே எழுதி பின்வருவனவற்றை எழுதுக.
பதிவுக் கட்டணம் ₹3 செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும்.

**15. உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள் யாவை (ஏதேனும் 5)**

1. ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறும்.
2. உள்நாட்டு பண மதிப்பில் மதிப்பிடப்படும்
3. போக்குவரத்து இடர்பாடு குறைவு
4. உள்நாட்டு சட்டங்கள் பின்பற்றப்படும்.
5. அத்தியாவசிய பொருட்களை சிக்கனமாக வழங்குவது.

**16. வெளிநாட்டு வியாபாரத்தின் பல்வேறு வகைகளை விவரி.**

1. இறக்குமதி வியாபாரம் 2. ஏற்றுமதி வியாபாரம் 3. மறு ஏற்றுமதி வியாபாரம்

**1. இறக்குமதி வியாபாரம்**

வெளிநாட்டில் இருந்து பொருட்களை வாங்குவது
**எகா:** பெட்ரோலியப் பொருட்கள்

**2. ஏற்றுமதி வியாபாரம்**

உள்நாட்டு பொருட்களை வெளிநாடுகளுக்கு விற்பது
**எகா:** மதுரை மல்லி சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்வது

**3. மறு ஏற்றுமதி வியாபாரம்**

ஒரு நாட்டில் இருந்து இறக்குமதி செய்த பொருட்களை வேறு நாட்டிற்கு ஏற்றுமதி செய்வது.

**17. சில்லறை வியாபாரிகளின் பண்பு நலன்கள் யாவை?**

1. பல்வேறு பொருட்களை வாங்கி விற்பவர்.
2. சிறிய அளவில் விற்பனை செய்பவர்
3. கிராமப் புறம் முதல் பெரிய நகர் புறம் வரை கடைகள் அமைப்பவர்.
4. ரொக்கத்திற்கு விற்பவர்.
5. நுகர்வோரிடம் நேரடி தொடர்பில் இருப்பார்.